2021 – 22 – 23 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் – பாரதியார், எம்.எஸ்.சுப்புலட்சுமி பெயர்களில்

# கலை வித்தகர்களுக்கான அகில இந்திய விருதுகள் - கேடயம் - சுழற்கேடயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!

**சென்னை, அக்.13 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கலைமாமணி விருது வழங்கும் விழாவில், பல்வேறு கலைப் பிரிவுகளைச் சேர்ந்த சிறந்த கலைஞர்களுக்கு 2021, 2022 மற்றும் 2023–ஆம் ஆண்டுகளுக்கான கலை மாமணி விருதுகளையும், பாரதியார், எம்.எஸ். சுப்புலட்சுமி பாலசரசுவதி ஆகியோர் பெயர்களில் கலை வித்தகர்களுக்கான அகில இந்திய விருதுகளையும், சிறந்த கலை நிறுவனத்திற்கு கேடயமும், சிறந்த நாடகக்குழுவிற்கு சுழற்கேடயத்தையும் வழங்கி சிறப்பித்தார்.**

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதிற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம், சின்னத்திரை, இசை நாடகம், கிராமியக் கலைகள் மற்றும் இதர கலைப் பிரிவுகள் என பிரிக்கப்பட்டு, கலைமாமணி விருது பெறத் தகுதியுள்ள கலைஞர்களைத் தேர்வு செய்திட கலைப் பிரிவு வாரியாக வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பட்டன. இவ்வல்லுநர் குழுக்களால் அளிக்கப்பட்ட தகுதியுள்ள கலைஞர்களின் பெயர்ப் பட்டியல் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் பொதுக்குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இயற்றப்பட்ட தீர்மானம் மற்றும் பரிந்துரையை ஏற்று 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் பெறும் விருதாளர்களின் பெயர் பட்டியல் தமிழ்நாடு அரசால் 24.9.2025 அன்று அறிவிக்கப்பட்டது.

### சிறந்த கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்குதல்

அதன்படி, 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளை ஆண்டிற்கு தலா 30 கலைஞர்கள் வீதம், மொத்தம் 90 கலைஞர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வழங்கி சிறப்பித்ததோடு, கலைமாமணி விருது பெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் விருது பட்டயத்தையும் வழங்கினார். (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது)

### கலை வித்தகர்களுக்கான சிறப்பு விருதுகள் வழங்குதல்

அதனைத் தொடர்ந்து, அகில இந்திய விருது பெறும் கலை வித்தகர்களுக்கான பாரதியார் விருதினை (இயல்) முனைவர் ந.முருகேசபாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ். சுப்புலட்சுமி விருதினை (இசை) பத்மவிபூஷன் டாக்டர் கே.ஜே.யேசுதாஸ் அவர்களின் சார்பில் அவரது மகன் விஜய் யேசுதாஸ் அவர்களிடமும், பாலசரசுவதி விருதினை (நாட்டியம்) பத்மஸ்ரீ முத்துகண்ணம்மாள் அவர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். விருதாளர்களுக்கு விருதுடன் ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகைக்கான காசோலையுடன், 3 சவரன் எடையுள்ள தங்கப் பதக்கத்தையும் வழங்கினார்.

### சிறந்த கலை நிறுவனம் மற்றும் நாடகக் குழுவிற்கு கேடயங்கள் வழங்குதல்

மேலும், சிறந்த கலை நிறுவனத்திற்கான கேடயத்தினை சென்னையிலுள்ள தமிழ் இசைச் சங்கத்திற்கும் (ராஜா அண்ணாமலை மன்றம்), சிறந்த நாடகக் குழுவிற்கான சுழற்கேடயத்தை மதுரை மாவட்டம் - பாலமேட்டில் உள்ள கலைமாமணி எம்.ஆர். முத்துசாமி நினைவு நாடக மன்றத்திற்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். கேடயங்களை பெற்ற சிறந்த கலை நிறுவனம் மற்றும் நாடகக் குழுவிற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் வழங்கினார்.

இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் வழங்கிய விருதுகள்!

### 2021 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களின் விவரம்

| வ.எண் | கலைஞரின் பெயர் | கலைப் பிரிவு |
|---|---|---|
| 1. | க.திருநாவுக்கரசு | எழுத்தாளர் |
| 2. | கவிஞர் நெல்லை ஜெயந்தா (எ) தே.ச.இராமசுப்பிரமணியன் | இயற்றமிழ்க் கவிஞர் |
| 3. | தங்கம்பட்டர் (எ) எஸ்.சந்திரசேகர் | சமயச் சொற்பொழிவாளர் |
| 4. | பாபநாசம் அசோக் ரமணி | குரலிசைக் கலைஞர் |
| 5. | பா.சற்குருநாதன் ஓதுவார் | திருமுறை தேவார இசைக் கலைஞர் |
| 6. | டி.ஏ.எஸ்.தக்கேசி | தமிழிசைப் பாடகர் |
| 7. | திருச்சூர் சி.நரேந்திரன் | மிருதங்கக் கலைஞர் |
| 8. | என்.நரசிம்மன் | கோட்டு வாத்தியக் கலைஞர் |
| 9. | கோ.பில்லப்பன் | நாதசுர ஆசிரியர் |
| 10. | திருக்காட்டுப்பள்ளி டி.ஜெ. சுப்ரமணியம் | நாதசுரக் கலைஞர் |
| 11. | கல்யாணபுரம் ஜி.சீனிவாசன் | நாதசுரக் கலைஞர் |
| 12. | திருவல்லிக்கேணி கே.சேகர் | தவில் கலைஞர் |
| 13. | வழுவூர் எஸ்.பழனியப்பன் | பரதநாட்டிய ஆசிரியர் |
| 14. | திருமதி பிரியா கார்த்திகேயன் | பரதநாட்டியக் கலைஞர் |
| 15. | பூச்சி எஸ்.முருகன் | நாடக நடிகர் |
| 16. | காரைக்குடி நாராயணன் | நாடக இயக்குநர் |
| 17. | என்.ஏ.அலெக்ஸ் | ஆர்மோனியக் கலைஞர் |
| 18. | எஸ்.ஜே.சூர்யா | திரைப்பட நடிகர் |
| 19. | செல்வி சாய் பல்லவி | திரைப்பட நடிகை |
| 20. | லிங்குசாமி | திரைப்பட இயக்குநர் |
| 21. | ஜே.கே.(எ) மா.ஜெயகுமார் | திரைப்பட அரங்க அமைப்பாளர் |
| 22. | சூப்பர் சுப்பராயன் | திரைப்பட சண்டைப் பயிற்சியாளர் |
| 23. | பி.கே.கமலேஷ் | சின்னத்திரை நடிகர் |
| 24. | எம்.பி.விசுவநாதன் | இசை நாடக நடிகர் |
| 25. | வீர சங்கர் | கிராமியப் பாடகர் |
| 26. | திருமதி நா.காமாட்சி | பொய்க்கால் குதிரை ஆட்டக் கலைஞர் |
| 27. | எம்.முனுசாமி | பெரியமேளக் கலைஞர் |
| 28. | பி.மருங்கன் | நையாண்டிமேள நாதசுரக் கலைஞர் |
| 29. | கே.கே.சி.பாலு | வள்ளி ஒயில் கும்மிக் கலைஞர் |
| 30. | வே.ஜீவானந்தன் | ஓவியக் கலைஞர் |

### 2022 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களின் விவரம்

| வ.எண் | கலைஞரின் பெயர் | கலைப் பிரிவு |
|---|---|---|
| 1. | திருமதி சாந்தகுமாரி சிவகடாட்சம் | எழுத்தாளர் |
| 2. | முனைவர் தி.மு.அப்துல்காதர் | இலக்கியப் பேச்சாளர் |
| 3. | சு.முத்துகணேசன் | சமயச் சொற்பொழிவாளர் |
| 4. | திருமதி ஜெயஸ்ரீ வைத்தியநாதன் | குரலிசைக் கலைஞர் |
| 5. | திருமதி சாரதா ராகவ் | குரலிசைக் கலைஞர் |
| 6. | பாகால ராமதாஸ் | வயலின் கலைஞர் |
| 7. | நெய்வேலி ஆர்.நாராயணன் | மிருதங்கம் |
| 8. | செம்பனார்கோயில் எஸ்.ஆர்.ஜி.எஸ்.மோகன்தாஸ் | நாதசுரக் கலைஞர் |
| 9. | சித்துக்காடு டி.ஜி.முருகவேல் | நாதசுரக் கலைஞர் |
| 10. | திருக்கடையூர் டி.ஜி.பாபு | தவில் கலைஞர் |
| 11. | திருமதி சுசித்ரா பாலசுப்ரமணியன் | கதா காலட்சேபக் கலைஞர் |
| 12. | திருமதி அமுதா தண்டபாணி | பரதநாட்டிய ஆசிரியர் |
| 13. | வி.சுப்பிரமணிய பாகவதர் | பாகவத மேளா கலைஞர் |
| 14. | சுவாமிமலை கே.சுரேஷ் | பரதநாட்டியக் குரலிசைக் கலைஞர் |
| 15. | பொன் சுந்தரேசன் | நாடக நடிகர் |
| 16. | கவிஞர் இரா.நன்மாறன் | நாடக இயக்குநர் |
| 17. | சோலை ராஜேந்திரன் | நாடகத் தயாரிப்பாளர் |
| 18. | விக்ரம் பிரபு | திரைப்பட நடிகர் |
| 19. | திருமதி ஜெயா வி.சி.குகநாதன் | திரைப்பட நடிகை |
| 20. | விவேகா | திரைப்பட பாடலாசிரியர் |
| 21. | டைமண்ட் பாபு | திரைப்பட செய்தித் தொடர்பாளர் |
| 22. | டி.லட்சுமிகாந்தன் | திரைப்பட புகைப்படக் கலைஞர் |
| 23. | மெட்டிஒலி திருமதி காயத்ரி | சின்னத்திரை நடிகை |
| 24. | என்.சத்தியராஜ் | இசை நாடக நடிகர் |
| 25. | திரு ந.ரஞ்சிதவேல் பொம்மு | தேவராட்டக் கலைஞர் |
| 26. | மு.கலைவாணன் | பொம்மலாட்டக் கலைஞர் |
| 27. | எம்.எஸ்.சி.ராதாரவி | தப்பாட்டக் கலைஞர் |
| 28. | கே.பாலு | நையாண்டிமேள நாதசுரக் கலைஞர் |
| 29. | ஆர்.சுவாமிநாதன் | பண்பாட்டுக் கலை பரப்புனர் |
| 30. | கு.லோகநாதன் | ஓவியக் கலைஞர் |

### 2023 ஆம் ஆண்டுக்கான கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களின் விவரம்

| வ.எண் | கலைஞரின் பெயர் | கலைப் பிரிவு |
|---|---|---|
| 1. | கவிஞர் கே.ஜீவபாரதி | இயற்றமிழ்க் கவிஞர் |
| 2. | முனைவர் ஆர்.காஷ்யப் மகேஷ் | குரலிசைக் கலைஞர் |
| 3. | திருமதி ஹேமலதாமணி | வீணைக் கலைஞர் |
| 4. | நாமக்கல் வே.பிரபு | கிளாரினெட் கலைஞர் |
| 5. | பி.பி.ரவிச்சந்திரன் | நாதசுரக் கலைஞர் |
| 6. | வடரங்கம் ஞான.நடராஜன் | நாதசுரக் கலைஞர் |
| 7. | இரும்புதலை எம்.எஸ்.ஆர்.பரமேஸ்வரன் | நாதசுரக் கலைஞர் |
| 8. | பாலியப்பட்டு இராமஜெயம்பாரதி | தவில் கலைஞர் |
| 9. | திருராமேஸ்வரம் முனைவர் பா.ராதாகிருஷ்ணன் | தவில் கலைஞர் |
| 10. | முனைவர் க.தனசுந்தரி | பரதநாட்டிய ஆசிரியர் |
| 11. | திருமதி ஜெயப்ரியா விக்ரமன் | குச்சுப்பிடி நாட்டியக் கலைஞர் |
| 12. | கே.ஹரிபிரசாத் | பரதநாட்டியக் குரலிசைக் கலைஞர் |
| 13. | என்.ஜோதிகண்ணன் | பழம்பெரும் நாடக நடிகர் |
| 14. | வானதிகதிர் (எ) பெ.கதிர்வேல் | நாடக நடிகர் |
| 15. | வி.கே.தேவநாதன் | விழிப்புணர்வு நாடக நடிகர் |
| 16. | கே.மணிகண்டன் | திரைப்பட நடிகர் |
| 17. | எம்.ஜார்ஜ் மரியான் | திரைப்பட குணச்சித்திர நடிகர் |
| 18. | அனிருத் ரவிச்சந்தர் | திரைப்பட இசையமைப்பாளர் |
| 19. | திருமதி ஸ்வேதா மோகன் | திரைப்பட பின்னணிப் பாடகி |
| 20. | சாண்டி (எ) அ.சந்தோஷ்குமார் | திரைப்பட நடன இயக்குநர் |
| 21. | நிகில் முருகன் (எ) சொ.ந.முருகன் | திரைப்பட செய்தித் தொடர்பாளர் |
| 22. | என்.பி.உமாசங்கர்பாபு | சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளர் |
| 23. | அழகன் தமிழ்மணி | சின்னத்திரை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் |
| 24. | ஏ.ஆர்.ஏ.கண்ணன் | இசை நாடக நடிகர் |
| 25. | திருமதி ஆர்.எம்.தமிழ்ச்செல்வி | இசை நாடக நடிகை |
| 26. | திரு கே.எம்.ராமநாதன் | தெருக்கூத்துக் கலைஞர் |
| 27. | டி.ஜெகநாதன் | வில்லுப்பாட்டுக் கலைஞர் |
| 28. | திரு சி.மகாமணி | நையாண்டிமேள தவில் கலைஞர் |
| 29. | முனைவர் ஆ.சந்திரபுஷ்பம் | கிராமியப் பாடல் ஆய்வாளர் |
| 30. | சு.தீனதயாளன் | சிற்பக் கலைஞர் |

## உங்களின் கலைகளை அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சேர்த்திடுங்கள்:

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், என்றைக்கும் கலைஞர்களின் முன்னேற்றத்துக்குத் துணை நிற்கும்!

## சென்னையில் நடந்த கலைமாமணி விருது வழங்கும் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, அக். 13– சென்னை, கலைவாணர் அரங்கத்தில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பாக, கலைமாமணி விருது வழங்கும் விழா, நேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு :

அப்போது அவர், "உங்களின் கலைகளை நீங்கள் உங்களுடன் நிறுத்திக்கொள்ளாமல், அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு போய் சேர்க்கும் வகையில், மாணவர்கள், இளைஞர்களுக்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

முதலில் விருது பெறுகிற அனைத்து கலைஞர்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை எப்போதுமே கலைகளையும், கலைஞர்களையும் கொண்டாடுகின்ற இயக்கம். தமிழ்நாட்டு மக்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த, கலையையும் ஒரு கருவியாக பயன்படுத்தியவர்கள்தான் நம் திராவிட இயக்க தமிழ்நாட்டுத் தலைவர்கள்.

### இயல் இசை நாடக மன்றம்

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர் நாடகத் துறையிலும், திரைத்துறையிலும் முத்திரைப் பதித்தவர்கள் என்பது, உங்கள் அனைவருக்கும் தெரியும். நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் திரைப்படங்களிலும், நாடகங்களிலும் நடித்திருப்பவர்தான். இன்றைக்கு வரையிலும் இசையையும், நாடகங்களையும், திரைப்படங்களையும் ரசிக்கக்கூடியவர் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். எனவேதான் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்துகிற அத்தனை நிகழ்ச்சிகளையும் அவர்களின் செயல்பாடுகளையும் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்துக்கும், கலைமாமணி விருதுக்கும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த அரங்கத்துக்கும் மிக நெருங்கிய ஒரு தொடர்பு உண்டு. இங்கு அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, 'சங்கீத நாடக சங்கம்' என்று இருந்த இந்த மன்றத்தின் பெயரை 'தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்' என்று மாற்றி அமைத்தவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான்.

இந்த நிகழ்ச்சி நடக்கின்ற இந்த அரங்கத்துக்கு, `கலைவாணர் அரங்கம்' என்று பெயர் சூட்டியதும் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஆரம்பத்தில் `கலா சிகாமணி' என்ற பெயரில்தான் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. அதை, கலைஞர் அவர்கள்தான் பெயர்மாற்றம் செய்து `கலைமாமணி விருது' என்று அறிவித்தார்.

### கடைசிவரை கலைஞர்

1967ஆம் ஆண்டு கலைஞர் அவர்களே இந்த கலைமாமணி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த வசனக்கர்த்தாவாகத் தேர்வு செய்யப்பட்டார். அப்போது கலைஞர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தார். முதலமைச்சராக இருந்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். இந்த அரங்கத்தில் கலைஞர் அவர்களின் பெயர் சொல்லப்பட்டதும், அவர் எழுந்து விருது வாங்குவதற்காக மேடை நோக்கி வந்தார். அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த விருதை கலைஞரிடம் கொடுக்காமல், அந்த விருதை அவரின் கழுத்தில் அவரே அணிந்துகொண்டார். பிறகுதான், அந்த மெடலை கலைஞரின் கழுத்தில் அணிவித்தார். 'கலைமாமணி விருது' பெறுவதால், கலைஞர் அவர்களுக்குக் கிடைத்தப் பெருமையை, தனக்குக் கிடைத்த பெருமையாகக் கொண்டாடினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எழுத்தாளர், நாடக ஆசிரியர், வசனகர்த்தா, பாடலாசிரியர், அரசியல் தலைவர், முதலமைச்சர் என்று கலைஞர் அவர்களுக்கு எத்தனையோ பரிணாமங்கள் இருந்தாலும்,



கடைசிவரை அவரின் அடையாளமாக கலைஞர் என்ற பெயர்தான் இன்றுவரை நிலைத்து நிற்கிறது.

### தாயின் முத்தம்

இங்கு விருதுகளைப் பெற இருக்கிற கலைஞர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன். கலைமாமணி விருதை வாங்குவதால், உங்களுக்குப் பெருமை என்று சொல்வதைவிட, உங்களைப் போன்ற சிறந்த கலைஞர்களைக் கொண்டிருப்பதால், நம் தமிழ்நாட்டுக்குப் பெருமை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 2009ஆம் ஆண்டு இதே கலைவாணர் அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சியில், கலைமாமணி விருதுகளை வழங்கிவிட்டு, கலைஞர் பேசினார். நீங்கள் தேசிய விருதுகளை வாங்கலாம், சர்வதேச விருதைப் பெறலாம், ஆனால், எந்த விருதாக இருந்தாலும் ஒரு தாயின் முத்தத்துக்கு அது ஈடாகாது. இந்த கலைமாமணி விருது என்பது, அந்தத் தாயின் முத்தத்துக்கு ஈடானது என்று சொல்லி இருக்கிறார். தாயின் முத்தத்துக்கு நிகரான கலைமாமணி விருதைத்தான், இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உங்களுக்கு வழங்க இருக்கிறார்கள்.

நம் அரசு அமைந்தபிறகு, நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உதவித்தொகையை 2 ஆயிரத்திலிருந்து நம் முதலமைச்சர் அவர்கள் 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுத்தார்கள். இந்த மன்றத்துக்காக ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்த நிதி 3 கோடி ரூபாயாக இருந்தது. நம் அரசு அமைந்தபிறகு, அந்த 3 கோடி ரூபாயை 4 கோடி ரூபாயாக உயர்த்தி கொடுத்தார் நம் முதலமைச்சர் அவர்கள்.

### இசை சங்கமம் கலை சங்கமம்

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. அந்த விழாக்களில் அனைத்துக் கலைஞர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கும் வகையிலும், நம் கலைகளை எல்லாம் மீட்டெடுக்கும் வகையிலும் `இசை சங்கமம்', `கலை சங்கமம்' என கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு முழுவதும் தொடர்ந்து கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றன. சமீபத்தில், தமிழில் சிறப்பாக கலைநூல்களை வெளியிடுகின்ற 5 நூல் ஆசிரியர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படுகிறது. எழுத்தாளர்களுக்கு வீடுகள், மறைந்த சிறந்த எழுத்தாளர்களுக்கு மணிமண்டபம் போன்றவற்றை நம் அரசு தொடர்ந்து உருவாக்கி வருகிறது.

இங்கு வந்திருக்கின்ற கலைஞர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். உங்களின் கலைகளை நீங்கள் உங்களுடன் நிறுத்திக்கொள்ளாமல், அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டுபோய் சேர்க்கும் வகையில், மாணவர்கள், இளைஞர்களுக்கு நீங்கள் பயிற்சி அளிக்க வேண்டும். சமூக வலைதளமான யூடியூப், இஸ்டாகிராம், டிவிட்டர் பக்கங்களில் உங்களின் கலைகளை, நீங்கள் உலகறிய செய்யவேண்டும். கலை என்பது வெறும் பொழுதுபோக்குக்காக மட்டுமல்லாமல், அது சமுதாய வளர்ச்சிக்குப் பயனுடையதாக இருக்க வேண்டும்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி அண்ணன் வாகை சந்திரசேகர் அவர்களுக்கும், அக்கா விஜயா தாயன்பன் அவர்களுக்கும், இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த இந்த மன்றத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் மீண்டும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்றைக்கும் கலைஞர்களின் முன்னேற்றத்துக்குத் துணை நிற்கும். இங்கு பல்வேறு பிரிவுகளில் கலைமாமணி விருதுகளைப் பெற்றுள்ள அத்தனை கலைஞர்களுக்கும் மீண்டும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர், உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன், சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, துணை மேயர் மகேஷ்குமார், முனைவர் முருகேசபாண்டியன் (பாரதியார் விருது), பத்மபூசன் கே.ஜே.ஏசுதாஸ் அவர்களின் குடும்பத்தினர் (எம்.எஸ்.சுப்புலட்சுமி விருது), பத்மஸ்ரீ முத்துக்கண்ணம்மாள் (பாலசரஸ்வதி விருது), அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன் ஐ.ஏ.எஸ்., கலை மற்றும் பண்பாட்டுத் துறை இயக்குநர் கவிதா ராமு ஐ.ஏ.எஸ்., திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு உள்பட முன்னணி கலைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.